1970 பிப்ரவரி 28]

திரு. பி. வேலுசாமி : *தலைவர் அவர்களே, திருமணங்களுக்காகச் செலவிட்டு, பல குடும்பங்கள் அழிந்தே போய்விட்டன. ஆகவே, இப்படிப்பட்ட செலவுகளில் அதிகபட்சம், குறைந்த பட்சம் என்று ஏதாவது வரம்பு கட்ட சர்க்கார் முன்வருமா?*

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : *மாண்புமிகு உறுப்பினர் போன்ற முற்போக்குவாதிகள் என்று சொல்லிக் கொள்பவர்கள், திருமணங்கள் சிக்கனமாக நடத்தப்படவேண்டும், எளிமையாக நடத்தப்படவேண்டும் என்று ஒரு இயக்கமே நடத்த வேண்டும்.*

திரு. வ. ஜார்ஜ் : *அவைத் தலைவர் அவர்களே, திருமணக்கடன்கள், இப்பொழுது ஒரு சிலருக்கு மட்டும் வெறும், விளம்பரத்திற்காகக் கொடுக்கப்படுகிறது. தேவைப்படுகிறவர்கள் எல்லோருக்கும் கொடுக்கப்படவில்லை. தேவைப்படுகிறவர்கள் எல்லோருக்கும் கொடுக்க அவர்களுடைய பிராவிடெண்ட் பண்ட் போன்ற நிதியிலிருந்தாவது கொடுக்க அரசாங்கம் முன்வருமா?*

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : *விளம்பரத்திற்காக என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். விளம்பரத்திற்காகக் கேள்வி கேட்கிறார்போலும் (சிரிப்பு). முதலில் நாம் நிதிநிலை அறிக்கையில் ரூ. 10 லட்சம் முன்கடன் கொடுப்பதற்காக ஒதுக்கினோம். அதில் நான்கு மாதங்களில், ரூ. 6 லட்சம் முன்பணமாகக் கொடுத்துவிட்டோம். அந்தப் பத்து லட்ச ரூபாயும் 4-10-1969-ஓடு மொத்தம் ஆறு மாதத்தில் இதற்காக நம்முடைய பட்ஜட்டில் செலவாகிவிட்டது. அது நம்முடைய முதல் வருட அனுபவம். மீண்டும் ஒரு பத்து லட்ச ரூபாய், ஏற்கனவே நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கியதோடுகூட, 27-10--1969 அன்றைய நிதி இலாகா ஆணைப்படி, இன்னொரு பத்து லட்சமும் ஒதுக்கப்பட்டது. இதற்கு இன்னமும் சட்ட சபை அனுமதி பெறமுடியாமல், கண்டின்ஜெண்ட் பண்டிலிருந்து ஒதுக்கியிருக்கிறோம். அந்த 27--10--1969 அன்று ஒதுக்கிய பணமும் 21-11-1969-ஓடு கொடுத்து முடிந்துவிட்டது. இந்த இரண்டு மாதங்களில் போக்கு அப்படியிருப்பதைப் பார்த்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொல்வது முற்றிலும் தவறானது. மொத்தம் ரூ. 22,60,022 முன்கடனைக் கொடுத்திருக்கிறோம். அதனால் 1,846 பேர்கள் நடத்திய திருமண வைபவத்தில் அரசாங்கம் பங்கு கொண்டிருக்கிறது.*

பர்கூர் மலையிலுள்ள பள்ளி

*139 வினா—**திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பர்கூர் மலையிலுள்ள மலைவாசிகளின் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.

திருமதி வி. ப. பழனியம்மாள் : தலைவர் அவர்களே, இந்த பர்கூர் மலைவாசிகள் ஐந்தாம் வகுப்புகூட படிக்காதவர்கள். அவர்கள் உயர்நிலைப் பள்ளிக்குப் போக வேண்டுமானால், குறைந்தது 25 மைல் நடக்க வேண்டியிருக்கிறது. போக்கு வரத்தும் சரிவர கிடையாது. ஆகவே, இதைத் தனிப்பட்ட முறையில், தனிச் சலுகை கொடுத்துக் கவனித்து, அங்கு உயர் நிலைப் பள்ளி வைக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்பொழுது பர்கூரில் இருப்பது தங்கிப் படிக்கும் துவக்கப் பள்ளி. அங்கே 50 மாணவர்கள் இருக்கிறார்கள். அதை அப்படியே உயர்த்த வேண்டும் என்றாலும், அதை ஒரு உயர் துவக்கப் பள்ளியாகத்தான் உயர்த்த முடியும். உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த முடியாது. அங்கே, 50 மாணவர்களுக்கான, அவர்களுக்குத் தேவையான வசதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வேறு புதிய செயற்குறிப்பு எதுவும் வரவில்லை அதற்கு அவசியம் இல்லை என்றும் அரசாங்கம் கருதுகிறது.

கால்நடைப் பண்ணைகள்

* 140 வினா—**திரு. மா. பா. சாரதி :** மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள 'கால்நடைப் பண்ணைகளை விரிவாக்கும் திட்டம் உண்டா?

(இ) 1967-68-ம் ஆண்டு இத் திட்டத்திற்கு மத்திய அரசு நிதி உதவி எவ்வளவு கிடைத்தது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) இத் திட்டத்திற்கு 1967-68-ம் ஆண்டுக்கான மத்திய அரசு நிதி உதவி வரையறுக்கப்படவில்லை. ஆனால், 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1969-74) நிதி உதவி ரூ. 30 லட்சம் தமிழ் நாட்டிலுள்ள கால்நடைப் பண்ணைகளை விரிவாக்கும் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ் நாட்டில் கால் நடைப்பண்ணைகள் எத்தனை இருக்கின்றன? அவை எங்கெங்கே இருக்கின்றன? அதனால் விவசாயிகள் அடைந்த நன்மைகள் யாவை என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தமிழகத்தில் 11 பண்ணைகள் இருக்கின்றன--ஓசூர், புதுக்கோட்டை, ஒரத்தநாடு, அபிசேகப் பட்டி, உதகமண்டலம், அலமாதி, காட்டுப்பாக்கம், சின்னசேலம், சாத்தூர் போன்ற 11 இடங்களில் இருக்கின்றன.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, last year there was a proposal to start a Central Cattle Farm in the Hosur taluk. About 1,000 acres of good land are available in the Sholagiri